எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் ஆண்டவரே. (“Increase our faith!”)

Praise the Lord:

தேவனாலே நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்பருமாக இருக்கிற கிறிஸ்து இயேசுவின் நாமத்திலே உங்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்கிறோம்.

கர்த்தருடைய ஜீவனுள்ள வார்த்தைகள் நம்மிலே ஜீவித்து வளர கர்த்தர் கிருபை செய்வாராக.

**சகலமும்** அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென். (ரோம 11:36)

For of Him and through Him and to Him are all things, to whom be glory forever. Amen.

நம்மைச் சுற்றியுள்ளவர்களைப்பற்றி சிந்திக்காமல், நம்மையும் நம்மோடு இருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் நம்முடைய தியானத்திலே அவருடைய வசனத்தின் மூலமாக சிந்திப்போம். ஆமென்.

நான் கிறிஸ்தவனாக வாழ்கிறேனா? *or* Am I living as a CHRISTIAN ?
நான் கிறிஸ்தவனாக வாழ்ந்து கிறிஸ்துவுக்குள் வளர்கிறேனா?*அல்லது*
Am I living as a CHRISTIAN and growing with CHRIST?
*என்று நான் சிந்தித்து கர்த்தரிடம் மன்றாடுவதுண்டு.*
Every one of you….Please think about your YEARS with CHRIST…..
நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய வருடங்களை சிந்தித்துப்பாருங்கள்.

ஆலோசனையும் அதை நிறைவேற்ற பெலத்தையும் கொடுக்கும் ஆவியானவர் நம்மை ஆட்கொண்டு வழிநடத்துவாராக.

விசுவாசம் கிறிஸ்தவர்களின் குணங்களில் முக்கியமான ஒன்றாகவும். சகலத்தையும் செய்துமுடித்தவர்களாக நிற்க திராணியுள்ளவர்களாகும்படி தேவன் நமக்கு கொடுத்த சர்வாயுதவர்க்கத்தில் ஒன்றாகவும், நமக்குள்ளே வளரவேண்டிய ஆவியின் கனிகளிலே ஒன்றாகவும் உள்ளது. இந்த விசுவாசத்தின் பூரணத்தை நோக்கி செல்ல கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

**2 கொரிந்தியர்/2 Corinthians 4:16** (பக்கம் 248)

ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.

Therefore we do not lose heart. Even though our outward man is perishing,
yet the inward *man* is being renewed day by day.

”ஆனபடியினாலே” என்ற வார்த்தைக்கு உள்ள கருத்துக்களை, இதற்கு முன் உள்ள வசனங்களை கர்த்தரோடு தனித்திருந்து வாசித்து தியானியுங்கள்.

எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது….என்ற இந்த வசனம் நம்மிலே ஜீவித்து வளருமானால்….
மேலும் மேலும் வளருமானால்…..சகோதர சகோதரிகளே……
”கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டி நான்”…என்ற வசனம் நம்மிலே பிரகாசிக்கும்.

விசுவாசத்தின் வளர்ச்சியைக் குறித்து 3 விதமான வசனக் கருத்துக்களை இன்று தியானித்து நம் விசுவாசத்திலே மேலும் வளர்ந்தவர்களாக கிறிஸ்துவின் கிருபையை மேலும் வாஞ்சிப்போம்.

***முதலாவதாக*….. மாற்கு/Mark 9:23-24** (பக்கம் 61)

நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான். (மாற்கு 9:23-24)

"‘If you can’?" said Jesus. “Everything is possible for one who believes.”
Immediately the boy’s father exclaimed, “I do believe; help me overcome my unbelief!”
[…weakness of faith! (amp)]

கிறிஸ்துவின் சீஷர்களாலே சுகப்படுத்தமுடியாமல் இருந்த, ஊமையான ஒரு ஆவிபிடித்த மகனை, அவன் தந்தையின் விண்ணப்பத்தைக் கேட்டு, இயேசுகிறிஸ்து சுகப்படுத்திய ஒரு நிகழ்ச்சி, **மாற்கு/Mark 9:17-29** வரையிலான வசனங்களை உங்கள் தனிப்பட்ட தியானித்திலே வாசித்து மேலும் தியானியுங்கள்.

## Step I. ”விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்”

“I do believe; help me overcome my unbelief!”

நம்முடைய அறியாமை, மாம்சத்தின் பெலவீனம்,
மற்றும் நம்மைச் சுற்றி உள்ளவர்களின் பெலவீனம்…. காரணமாக
நம்மிடத்திலே அவ்விசுவாசம் இருக்குமானால், அதை நீக்க,
சூழ்நிலைகளைப் பார்க்காது ஆண்டவரைமட்டும் நோக்கி,

”விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் ஆண்டவரே என்று சொல்லி மன்றாடுவோம். கர்த்தர் உங்கள் அவிசுவாசத்தை நீக்கிப்போடுவார். ஆமென்.

To remove our unbelief (weakness of Faith) due to…..Our ignorance, Our weakness in flesh,
weakness due to our surroundings…… Let us pray to God as this word says.

நாளுக்குநாள் நாம் புதிதாக்கப்பட்டு…..

அவிசுவாசம் குறைந்து குறைந்து, விசுவாசத்திலே தொடர்ந்தும் வளர்கிறவர்களாக கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆமென்.

***இரண்டாவதாக***... **லூக்கா/Luke 17:5** (பக்கம் 109)

அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி: எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் என்றார்கள். (லூக்கா 17:5)

The apostles said to the Lord, "Increase our faith!"

இயேசு கிறிஸ்து, பல அறிவுரைகளையும் கட்டளைகளையும் மக்களுக்கும் சீஷர்களுக்கும் அறிவித்தபிறகு.... **லூக்கா/Luke 17** வது அதிகாரத்திலே, கிறிஸ்துவின் கட்டளைகளை கடைபிடிக்கும்போது ஏற்படும் இடறல்களை எப்படி நாம் எச்சரிக்கையாக மேற்கொள்ளவேண்டுமென்பதையும் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படக்கூடிய வண்ணமாக எப்படி நடந்துகொள்ளவேண்டுமெனவும் அறிவுரை சொல்கிறார்....

விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள வாஞ்சையாக இருந்த சீஷர்கள், விசுவாசத்தை வளர்த்துக்கொள்வதற்கு உள்ள கஷ்டங்களை உணர்ந்தவர்களாக....
எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் ஆண்டவரே என கேட்கிறார்கள்.
நம் சொல்லும் செயலும் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிப்பவருமாகிய நம் ஆண்டவரை மகிமைப்படுத்துமானால், அவர் நம் விசுவாசத்தை நிச்சயம் வர்த்திக்கப் பண்ணுவார். ஆமென்.

## Step II

எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் ஆண்டவரே.

The apostles said to the Lord, "Increase our faith!"

நாம் விசுவாசத்திலே ஒவ்வொரு நாளும் வளர, நமக்குள்ளே வாசம் செய்யும் ஆண்டவர் நமக்கு உதவி செய்வார்.... மனுஷனாலே கூடாதது. தேவனாலே கூடும். ஆமென்.

நான் **எனக்குள்ளே** வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற **அவருடைய பலத்தின்படி** போராடிப் பிரயாசப்படுகிறேன். (கொலோசெயர்/Colossians 1:29) என்ற வசனத்தின்படி
To this end I also labor, striving according to His working which works in me mightily.

**அவருடைய வல்லமையின்படி** நாம் செயல்படுகிறோம் என்பதை..... மறந்து....
நமக்குள் பெருமை உண்டாகக்கூடிய வாய்ப்பை....
நம் மாம்ச பெலவீனம் நமக்கு சில நேரங்களிலே கொண்டுவரும்.
சகலத்தையும் அறிந்த நம் ஆண்டவர்....
எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் என்று கேட்ட சீஷர்களுக்கு,
ஒரு அருமையான உவமை மூலம் இதை உணர்த்துகிறார்.

**லூக்கா/Luke 17:7-10** (பக்கம் 109)

இந்த வசனங்களின் ஆழ்ந்த கருத்துக்களை உணரக்கூடிய இருதயத்தை,
ஞானத்தையும் உணர்வையும் தெளிவையும் கொடுக்கும் ஆவியானவர் நமக்குக் கொடுப்பாராக.
எங்களுக்குக் கர்த்தரால் உணர்த்தப்பட்ட கிரியைகளை கர்த்தருக்காக செய்யும்பொழுது:
செய்யவேண்டிய கடமையைமாத்திரம் **கர்த்தருக்காக** செய்துவருகிறோம் என்று சொல்லக்கூடிய **மனப்பக்குவத்தை**.......எல்லா சூழ்நிலைகளிலேயும் பெற்றுக்கொள்ள,
அறிவையும் கர்த்தருக்குப்பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியானவர் நமக்கு அருள்வாராக
கிறிஸ்துவுனுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலா. 5:24) *என்கிற வசனம் நம்மிலே ஜீவிக்குமானால்....*

நம் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும்
நம்மை ஒரு போதும் ஆட்கொண்டுவிடாதபடி, கர்த்தர் நமக்கு உதவிசெய்வார்.

அவ்விசுவாசம் நீக்கப்பட்டு, விசுவாசத்திலே வளர்ந்து வருகிற நாம், விசுவாசத்திலே பூரணத்தை நோக்கிச் செல்ல எப்பொழுதும் முயற்சிப்போமாக...

***மூன்றாவதாக…***

பழைய ஏற்பாட்டு காலத்தில், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற 3 வாலிபர்களின். விசுவாசத்தின் பூரணத்தை தானியேல் 3 வது அதிகாரத்தில் வாசிக்கலாம்.

**தானியேல்/Daniel 3:17-18** (பக்கம் 1033)

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்;
அவர் ….. விடுவிப்பார்.
விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள் (தானியேல் 3:17-18)

> If that *is the case,* our God whom we serve is able to deliver us from the burning fiery furnace, and He will deliver *us* from your hand, O king. [18] But if not, let it be known to you, O king, that we do not serve your gods, nor will we worship the gold image which you have set up."

## Step III

விடுவிக்காமற்போனாலும்,….என்று அவர்கள் சொன்னது விசுவாசக் குறைச்சலினாலல்ல.
விசுவாச உறுதியினாலும், விசுவாசத்தின் தரம் பூரணத்தை நோக்கி வளர்வதினாலே அவர்கள் அப்படிச் சொன்னார்கள்.

விசுவாசம் உறுதிப்பட உறுதிப்பட, கர்த்தரின் பூரணத்தை நோக்கி வளரும்போது…..

நமக்கு முன்னே துன்பங்கள் வருவதை நாம் அறிந்தாலும்……

இந்த உலகத்தின் துக்கத்தினாலே நாம் இடறலடையமாட்டோம்.

> இடறல்கள் நமக்கு வரும் துன்பத்தினால் மட்டுமல்ல….
> நமக்கு கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதத்தினாலும்கூட, நம் பெலவீனம், நமக்கு இடறலை ஏற்படுத்தலாம்.
> சூழ்நிலைகளை சிந்தித்துப் பாருங்கள்.

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். (கொலோசெயர் 3:2)
நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுருபமாகுங்கள். (ரோமர் 12:2)

> என்ற வசனங்கள் நம்மிலே ஜீவித்து வளருமானால்,

இந்த உலகத்தின் வாழ்க்கையே இல்லாமல் போகிற சூழ்நிலை வந்தாலும்……..
கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப்பிரிப்பவன் யார்? என்ற கேள்விக்கு ஒரு பட்டியலே கொடுத்து…எதுவும் பிரிக்கமாட்டாது என்று நிச்சயத்துமிருக்கிறேன் என்ற ரோமரிலே உள்ள வசனம் நம்மிலே பிரகாசிக்கும். (ரோமர் 8:36-39)

"விடுவிக்காமற்போனாலும்….நாங்கள் ஆராதிப்பது சகலத்தையும் உருவாக்கின தேவனையே.."
என்ற பழைய ஏற்பாட்டு வசனமும்….
கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப்பிரிப்பவன் யார்? எதுவும் பிரிக்கமாட்டாது என்று நிச்சயத்துமிருக்கிறேன் என்ற ரோமரிலே உள்ள புதியஏற்பாட்டு வசனமும் நமக்குள்ளே ஜீவித்து வளருமானால்…..
நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன். (2 தீமோத்தேயு 1:12)
I know whom I have believed and am persuaded that He is able to keep what I have committed to Him until that Day.
என்ற தீமோத்தேயுவிலே உள்ள வசனம், நம்மிடத்திலே நிச்சயமாக ஜீவித்து வளரும். ஆமென்.
நம் விசுவாசம் இப்படி வளர்ந்தால்தான், <u>கிறிஸ்துவை அறியாத மக்களுக்காக,</u> கிறிஸ்துவுக்குள் பிரயாசப்படமுடியும்……

## *Let us review*

**I**. <u>"விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்"</u>

"I do believe; help me overcome my unbelief!"

அவிசுவாசத்தை நீக்கிப்போட்டு ஆண்டவர் நம்மை வழிநடத்துவார்…..

**II**. <u>எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் ஆண்டவரே.</u>

> The apostles said to the Lord, "Increase our faith!"

நம் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள நமக்கு கர்த்தர் துணையிருப்பார்….

*விசுவாசத்திலே பூரணத்தை நோக்கி நாம் வளர்ந்தோமானால்…..*

**III**.<u>கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மை…எதுவும் பிரிக்கமாட்டாது என்று நிச்சயத்துமிருக்கிறேன் …</u>
<u>……விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்</u>

> "For I am persuaded beyond doubt …Nothing shall be able to separate us from the love of God,…"
> I know whom I have believed …

**(கவனியுங்கள்: முதல் 2 நிலைகளில் வேண்டுகிற நாம் 3வது நிலையில் <u>அறிக்கையிடுகிறோம்</u>….)**

(Please note: First 2 steps we pray to God. In the 3rd Step we declare our faith…..)

இப்படிப்பட்ட அறிக்கை நம்முடைய இருதயத்திலிருந்து வரவேண்டும்.
**அறிக்கைமட்டும் போதாது** சகோதர சகோதரிகளே.
நம் விசுவாசம் வளர்ந்து பூரணப்பட வேதம் கொடுக்கும் ஆலோசனை:

**யாக்கோபு/James 2:22** (பக்கம் 314)

விசுவாம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே.
Do you see that faith was working together with his works, and by works faith was made perfect?
தேவனுடைய பிரியத்தை செய்ய பிரயாசப்படும்போது, கர்த்தர் நமக்கு உதவி செய்வார்.

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." (எபி. 11:1)
Now faith is the substance of things hoped for, the evidence of things not seen.

சிந்தித்துப் பாருங்கள்…..
இந்த உலகத்தில் அவரவர்கள் நம்புவதிலே உறுதியாகத்தான் இருக்கிறார்கள்.
நீங்கள் இன்னின்ன காரியங்களைச் செய்தால் கடவுளிடம் சேர்வீர்கள் என்று ஒரு மனிதர் சொல்லும்போது அதை அப்படியே நம்புவதிலே உறுதியாக இருக்கிறார்கள்.
நீங்கள் மற்றவர்களைக் கொல்வதற்காக உங்களையே தியாகம் செய்தால்: நீங்கள் கடவுளிடம் சேர்வீர்கள் என்று ஒருவர் சொல்லும்போது, அதை அப்படியே உறுதியாக நம்பி அப்படியே செய்கிறார்கள்.
இப்படி எவ்வளவோ காரியங்களை உலகத்தின் நடைமுறைகளில் காணலாம்.
இவர்கள் நம்பிக்கை வைக்கிற கருத்துக்கள் உண்மையுள்ளவைகள் அல்ல என்பதை அறியாமல் இருக்கிறார்கள்.
உண்மையை அறிந்த நாம், அதை அறிவிக்கும் நல்ல பேராட்டத்தை போராட கர்த்தருக்குள் கிரியை செய்வோமாக.
*கடைசியாக*

**யோவான்/John 17:4**

பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.
I have glorified You on the earth. I have finished the work which You have given Me to do.
இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்மை ஒப்புக்கொடுப்பதற்கு முன்பாக….
நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். என்று சொல்கிறார்.
கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; (பிலி. 2:5)
Let this mind be in you which was also in Christ Jesus,
என்ற வசனம் அப்போஸ்தலர் பவுலின் இருதயத்தில் ஜீவித்து வளர்ந்ததினாலே…..
பவுல் இவ்வுலகத்திலிருந்து கிறிஸ்துவிடம் செல்வதற்கு முன்பாக சொல்கிறார்….

**2 தீமோத்தேயு/2 Timothy 4:7**

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.
I have fought the good fight, I have finished the race, I have kept the faith
கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்பட்டிருக்கும் சகோதர சகோதரிகளே:
நல்ல போராட்டத்தை அறிந்த நாம்………..
…பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; (எபிரெயர் 12:1)
….let us lay aside every weight, and the sin which so easily ensnares *us*, and let us run with endurance the race that is set before us, [2] looking unto Jesus, the author and finisher of *our* faith,..
தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய …………..
ஆண்டவரே எனக்கு ஆலோசனை கொடுத்தருளும் பெலத்தை கொடுத்தருளும் என்று மன்றாடுவோம்.
நம்முடைய ஜெபம் விசுவாசத்தோடும், விசுவாசம் கிரியையோடும் இருக்க கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் **இன்று தியானித்த வசனங்களின் மூலமாக** மேலும் ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக.

**Let us pray. ..**